# தொழிலாளர் துறை – பத்திரிக்கைச் செய்தி

## அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தேசிய மருத்துவ காப்பீடு திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான பயிலரங்கம்

*****

நம் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏராளமான மக்கள் தங்களுடைய மருத்துவ சிகிச்சைக்கு தேவையான நிதி ஆதாரங்கள் இல்லாததால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொள்ளும் பொருட்டு கடன் வாங்குகின்றனர் அல்லது அவர்களுடைய சொத்துக்களை விற்கின்றனர். இத்தகைய நிலையை மாற்ற மத்திய அரசு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீம யோஜனா எனப்படும் தேசிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் ஒன்றை 2.10.2007 முதல் துவக்கியுள்ளது. மேற்படி மருத்துவ காப்பீட்டுத் திட்டம், ஏழைக் குடும்பங்களின் பொருளாதார சிக்கல்களைக் களைந்து, அறுவை சிகிச்சையுடன் கூடிய தரமான மருத்துவ சிகிச்சைக்கு தரமான மருத்துவமனைகள் மூலம் வழிவகுப்பதோடு, பெரும் அளவிலான மருத்துவச் செலவினங்களுக்கு ஏதுவாக பொருளாதார பாதுகாப்பையும் அளிக்கிறது.

தமிழக அரசு இத்திட்டத்தை காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் முன்னோடித் திட்ட அடிப்படையில் இந்நிதியாண்டு முதல் அறிமுகப்படுத்துகிறது. இத்திட்ட செயலாக்கத்திற்கு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மாநில அளவிலான ஒருங்கிணைவு முகமையாக (State Nodal Agency) செயல்படுகிறது.

இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அமைப்பு சாராத தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் பயன் பெறுவர்.

இத்திட்டப்படி குடும்பம் என்பது குடும்பத் தலைவர், தலைவி மற்றும் அவர்களைச் சார்ந்த மூன்று குழந்தைகள் ஆகியோரைக் குறிக்கும். இத்திட்டத்தின் கீழ் சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகள் வரையறுக்கப்பட்டு ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ.30,000/- வரையிலான மருத்துவமனை சார்ந்த சிகிச்சை (Hospitalisation) மற்றும் அறுவை சிகிச்சை அளிக்க காப்பீடு செய்யப்படும். மருத்துவக் காப்பீடு ஒரு வருட மொத்தத் தொகை ரூ. 30,000/- ஐ குடும்பத்தைச் சார்ந்த தனி நபரோ அல்லது குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்தோ பெறலாம். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மருத்துவமனைக்கு நோயாளிகள் சென்றுவர ஒரு முறைக்கு ரூ.100/- என்ற அடிப்படையில் வருடம் ரூ.1,000/-க்கு மிகாமல் போக்குவரத்துப்படியும் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு மாநில அரசு 25% காப்பீடு சந்தா தொகையும், மத்திய அரசு தனது பங்காக 75% காப்பீடு தொகையும் செலுத்தும். பயனாளி ரூ.30/- மட்டுமே பதிவுக் கட்டணமாக செலுத்தினால் போதுமானது. மின்னணு அடையாள அட்டை ஒன்று உறுப்பினருக்கு வழங்கப்பட்டு, அதில் தொழிலாளி மற்றும் அவர்தம் குடும்பத்தினர் குறித்த விபரங்கள் மின்னணு மூலம் பதியப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டில் இந்த தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த ஏதுவாக சென்னை-17, GRT ஓட்டலில் மாநில மத்திய அரசுகளின் உயர் அதிகாரிகள், இன்சூரன்ஸ் நிறுவனங்கள், மாவட்ட ஆட்சியர்கள் போன்றோர்கள் பங்கு பெற்ற பயிலரங்கம் ஒன்று 26.6.2008 அன்று நடை பெற்றது. இப்பயிலரங்கினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் துவக்கி வைத்தார். திரு. இரமேஷ் குமார் கண்ணா, இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசு செயலர் இப்பயிலரங்கிற்கு தலைமை வகித்தார். திரு. அனில் சுவரூப், இ.ஆ.ப., மத்திய அரசு தொழிலாளர் நலத் துறை முதன்மை இயக்குநர் இப்பயிலரங்கில் சிறப்புரையாற்றினார். திரு. கே. செல்வமுத்து, இ.ஆ.ப. கூடுதல் தொழிலாளர் ஆணையர் இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவது குறித்து விளக்கினார். திரு. அ. சுகுமாரன், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள் பயிலரங்கத்தை துவக்கி வைத்து, துவக்க பேருரையாற்றும் போது மத்திய அரசின் தேசிய காப்பீடு திட்டத்தை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்துவதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் இலட்சக் கணக்கான அமைப்பு சாரா தொழிலாளர்கள் பயன் பெறுவர் என்றும், இத்திட்டத்தின் மூலம் அமைப்பு சாரா ஏழைத் தொழிலாளர்கள் தங்களது குடும்பத்தினரின் உடல்நலத்தை எளிதில் பாதுகாத்துக் கொள்ள இயலும் வரப்பிரசாதமாகவே இத்திட்டம்

உள்ளதாகவும், அடிப்படைத் தேவைகளே கனவாக இருக்கும் இத்தொழிலாளர்களுக்கு இத்திட்டம் ஒரு விடிவெள்ளியாகவே விளங்குமென குறிப்பிட்டார். மேலும் இத்திட்டத்தின் மொத்த செலவில் 25% காப்பீடு சந்தா தொகையான ரூ.24 கோடியை மாநில அரசின் பங்காக இந்த அரசு ஒதுக்கியுள்ளதென்றும், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் முறையே 2,40,577 பேர்களும், 2,30,390 பேர்களும் பயன்பெறவுள்ளனர் என்றும், இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற தமிழக அரசு தமது முழு ஆதரவை அளிக்குமென்றும் குறிப்பிட்டார்.

மேலும் இப்பயிலரங்கில் கேரள மாநிலத்தின் தொழிலாளர் துறை செயலர், கர்நாடக மாநில கூடுதல் ஆணையர், உலக வங்கி பிரதிநிதிகள், தேசிய தகவல் மையம் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். தமிழ் நாட்டில் இத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு மற்றும் மாநில அரசு அதிகாரிகளுக்கிடையே இப்பயிலரங்கில் ஒரு ஒப்பந்தம் (Memorandum of understanding) ~~ஏற்பட்டது~~. கையொப்பமிடப்பட்டது.

(அ. சுகுமாரன், இ.ஆ.ப.),
தொழிலாளர் ஆணையர்,
சென்னை.6.